சொன்னார். உண்மை நிலை என்னவென்றால், தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள ஏரிகளுக்குத் தண்ணீர் கிடைக்க வாய்க்கால் அமைக்கும் திட்டம் எதுவும் அரசால் ஒப்பளிக்கப்படவில்லை. பணிகள் நடைபெறவும் இல்லை. இத்திட்டம் ஆய்வில் மட்டுமே உள்ளது. பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள 9 ஏரிகளுக்கு சாகுபடிக்கு தண்ணீர் கிடைத்திட சின்னாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் ஜர்தலால் ஏரியிலிருந்து மதிகொண்பாளையம் ஏரிக்கு வரும் கால்வாயின் கொள்திறனை அதிகரித்து தனியாக ஒரு கிளைக் கால்வாயை வெட்டி பாசனம் உறுதி செய்ய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.436 லட்சத்திற்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், தருமபுரி அவர்களின் ஒத்திசைவுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால், கல்லேரி, தோட்டலான் ஏரி, பாப்பாரப்பட்டி பெரிய ஏரி, அம்மன் ஏரி, கஞ்சன் ஏரி, மதஹள்ளி ஏரி, பாப்பாரப்பட்டி சிறிய ஏரி, ஜிட்லகாரன்பட்டி ஏரி, பாலவாடி ஏரி ஆகிய 9 ஏரிகள் பயன்பெறும். இதனால் சுமார் 500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். மேற்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தபடி பஞ்சப்பள்ளி வாய்க்கால் ஏரி உட்பட இன்னும் சில ஏரிகளை இதில் சேர்த்து இருக்கின்றார்கள். இதனையும் ஒத்திசைவுக்கு திரும்ப அனுப்புகின்றபொழுது அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என்பதனை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவின் 2001-2002ஆம் ஆண்டிற்கான 24 முதல் 28 வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.